## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2017/2018 (செப்டம்பர்/ஒக்டோபர் 2020)

## DT/S 3113 Dramaturgy

**நேரம் : 02 மணித்தியாலங்கள்**

**பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

---

### பகுதி – I

01. அரங்க ஆற்றுகையில் கட்புலத்தைப் பூர்த்தி செய்யும் முக்கிய கூறாக ஒளிவிதானிப்பும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

(1) படச்சட்ட மேடைக்கான ஒளியமைப்பின்போது பயன்படுத்தப்படும் பொருட்களையும் ஒளி விளக்குகளின் வகைகளையும் குறிப்பிடுக.
(04 புள்ளிகள்)

(2) நீர் பார்த்த அல்லது பங்குகொண்ட "எந்தையும் தாயும்" எனும் நாடகத்தின் கதையை நகர்த்திச் செல்வதற்கு அவை எவ்வாறு பயன்பட்டன? மதிப்பிடுக.
(16 புள்ளிகள்)

02. வேட உடை ஒப்பனை அரங்க ஆற்றுகை வெளியில் வெவ்வேறு தேவைகளின் அடிப்படையில் கையாளப்படுகின்றன.

(1) பாரம்பரியக் கூத்தாற்றுகையில் "உடுப்புக் கட்டுதல்" முறைபற்றித் தெளிவுபடுத்துக.
(10 புள்ளிகள்)

(2) வேட உடை ஒப்பனையின் முக்கியத்துவத்தினை எந்தையும் தாயும் நாடகத்தில் வரும் சங்கரப்பிள்ளை, மகேஸ்வரி ஆகிய பாத்திரங்களை மனதில் இருத்தி நிறுவுக.
(10 புள்ளிகள்)

03. (1) மேடைப் பொருட்களும் கைப்பொருட்களும் நாடக ஆற்றுகையின் வலுவாக்கத்திற்கு அவசியமா? உமது கூற்றை எடுத்துக் காட்டுக்களுடன் விபரிக்குக.
(10 புள்ளிகள்)

(2) நடிப்பிற்கு துணைபுரியும் மேடைப்பொருட்களின் வகையினை நீர் பார்த்த அல்லது பங்குகொண்ட நாடகத்தினைக் கொண்டு குறிப்பிடுக.
(05 புள்ளிகள்)

(3) காமன் கூத்தில் கைப்பொருட்களின் கையாள்கை ஆற்றுகைக்கு எவ்வாறு உறுதுணையளிக்கின்றது?
(05 புள்ளிகள்)

**(ம.ப.பா)**

## பகுதி – II

04. அரங்க இசையின் வகையினைத்தந்து, பாரம்பரிய அரங்கு அல்லது நவீன அரங்குகளில் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.

(30 புள்ளிகள்)

05. அரங்கில் காட்சியமைப்பு பெறும் முக்கியத்துவத்தை வகைப்படுத்தி, பார்ப்போரின் உணர்வு வெளிப்பாட்டிற்கும் கட்புலப் பூர்த்திக்கும் எவ்வாறு முன்னிலை வகிக்கின்றது என்பதை யதார்த்த நாடகத்தினை அடிப்படையாகக் கொண்டு கட்டுரை வரைக.

(30 புள்ளிகள்)

06. எழுத்துப் பனுவலில் வெளிப்படும் கதாபாத்திரங்களை நடிகனூடாக நெறியாளர் முன்னிறுத்தும் முறைமையினையும், படைப்பாக்க உத்தியினையும் நீர் பார்த்த அல்லது நடித்த நாடகத்தினை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்துக.

(30 புள்ளிகள்)

*****